<u>**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**</u>

<u>**SIRKALI**</u>

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

<u>**Case No. C.C. No. 250/2021**</u>

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: P.W-1, L.W-1 | |
| Name | : Srinivasan | Defence | : |
| Father Name | : Kalyanraman | Court | : |
| Village | :Annanperumalkoil | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | :57/2022 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.06.2022.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் அண்ணன்பெருமாள் கோயில் , கிளார்திடல் தெருவில் வசித்து வருகிறேன். நான் வட்டார கல்வி அலுவலராக பணிப்புரிகிறேன். எதிரி பிராபகரனை தெரியும். எனது பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 24.06.2021ம்தேதி இரவு சுமார் 7 மணிக்கு நான் எனது வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தபோது எதிரி எனது வீட்டின் இடதுப்புறத்தில் உள்ள பாக்குமரங்களை வெட்டியது சத்தம் கேட்டு எனது வீட்டில் வேலை செய்யும் சாட்சி விமலா சென்று பார்த்து வந்து என்னிடம் எதிரி பாக்குமரங்களை வெட்டுவதாக சொன்னார். உடனே நானும் சென்று பார்த்தேன். அப்போது எதிரி பாக்குமரங்களை வெட்டி விட்டு கீழே இறங்கி வந்தார். நான்பார்த்ததும் என்னை தகாத வார்த்தைகளால் திட்டி , கையில் வைத்திருந்த அரிவாளை என் கழுத்தில் வைத்து என்னை கொலை செய்ய முயற்ச்சி செய்தார். நான் அரிவாளை தடுத்தேன் எனது இருகரங்களிலும் உள்ள விரல்களிலும் வெட்டுகாயம் பட்டு இரத்தம் வெளியேறியது. வழக்கு சம்பவத்திற்கு முன்பு 05.05.2021 அன்று எனது அம்மா இறந்துவிட்டார். எதிரி எனது அம்மாவையும் கொச்சைப்படுத்தும் விதமாக தேவுடியா மகனே , குச்சிகாரி மகனே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். உடனே வீட்டில் இருந்த என் மனைவி மற்றும் எனது 2 மகள்கள் ஓடிவந்து ஏன் எங்கள் அப்பாவை திட்டுகீறிர்கள் என்று

கேட்டார்கள் அவர்களையும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். பக்கத்து வீட்டுக்காரர்கள் வரவும், எதிரி சென்றுவிட்டார்.. பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் அரிவாளால் தான் எதிரி என்னை கழுத்தில் வைத்து தாக்கினார். அந்த அரிவால் சா.பொ. 1ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர் இல்லை என்பதால் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.